



▶ செங்கல்பட்டு அடுத்த மகேந்திரா வேர்ல்டு சிட்டியில் அறிவியல் மேம்பாட்டு திறனை வளர்க்கும் வகையில் நடந்த நிகழ்ச்சியில் ஓவியங்களை வரையும் மாணவர்கள்.

## மகேந்திரா தொழில்நுட்பப் பூங்காவில்

# மாணவர்களுக்கான தேசிய ஒலிம்பிக் போட்டிகள்

**செங்கல்பட்டு, ஜன. 24:** செங்கல்பட்டு அடுத்த மகேந்திரா வேர்ல்டு சிட்டி சார்பில் சொசைட்டி ஆஃப் ஆட்டோமோட்டிவ் இஞ்சினியரிங் சார்பில் எதிர்கால பொறியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளை ஊக்குவிக்கும் வகையில் மாணவர்களுக்கான 8ஆம் ஆண்டு தேசிய ஒலிம்பிக் போட்டிகள் மகேந்திரா தொழில் நுட்பப் பூங் காவில் நடைபெற்றது.

இந்தியா முழுவதும் டெல்லி, பெங்களூர், சென்னை உள்ளிட்ட 50 நகரங்களில் உள்ள பல்வேறு பள்ளிகளைச் சேர்ந்த 5 மற்றும் 6ஆம் வகுப்பு மாணவர்களின் அறிவியல் மற்றும் பொறியியல் ஆர்வத்தை மேம்படுத்தும் வகையில் நேற்று முன் தினம் தொடங்கி 3 நாள்களுக்குப் போட்டிகள் நடைபெற்றன. இதில் 300க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்கள் கலந்துகொண்டு அறிவியல் தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் ஆகிய துறைகளின் மூலம் தங்கள் படைப்புகளை நிகழ்த்தி காட்டினர்.

இந்நிகழ்ச்சியில் மாணவர்கள் ராக்கெட் வடிவமைப்பிற்குத் தேவையான அடிப்படை இயற்பியலைப் பயன்படுத்தி ஜெட்டாய் எனப்படும் பலூனால் உந்தப்படும் வாகனத்தை வடிவமைத்தனர். கப்பல் கட்டுமானத்தின் அடிப்படையான சிறு பாய்மரப் படகினைத் தயாரித்துக் காட்டினர். இதனை மதிப்பீட்டாளர்கள் மதிப்பீடு செய்து பலூனால் ஆன வாகனத்தை வடிவமைத்த மாணவர்களைத் தேர்வு செய்தனர். இவர்கள் சர்வதேச அளவில் நடைபெறும் போட்டியில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள்.